**மாலிம்பட பிரதேச சபை**

**மாத்தறை மாவட்டம்**

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 05 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 19 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

---------------------------------------------

இவ்வறிக்கையின் பந்தி 1.3 இல் குறிப்பிட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கல்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான மாலிம்பட பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

-----------------------------------------------------------------------------------------------------

(அ) 2010 ஜனவரி 19 திகதிய இலக்கம் PED/54 கொண்ட அரச தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்று நிருபத்தின் பிரகாரம் 2011 ஜனவரி 01 திகதி முதல் உள்ளுராட்சி நிறுவனங்கள் அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுகளை தயாரிக்க வேண்டும். எனினும் அந் நியமங்களை கடைபிடித்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

------------------------------------------

மீளாய்வாண்டிற்கான சமர்ப்பித்திருந்த நிதிக் கூற்றுக்களுடன் அக் கணக்குகள் தயாரிக்கும் போது கடைபிடிக்கப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டு தொடர்பாக பாதைகள் நிர்மாண வேலைகளுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளும் போது அக் குறிப்பிட்ட பாதைகளுக்கான பெயர்ப் பலகை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தச் சங்கங்களுக்கு செலுத்த வேண்டிய தொகையில் இருந்து கழிக்கப்பட்ட ரூபா 54,000 தொகையொன்று பௌதீகத் திட்டமிடல் விதிகளின் காணிகள் மற்றும் கட்டிடங்கள் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் மூலதனச் செலவுக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டுள்ளமையால் மீளாய்வாண்டிற்கான மூலதனச் செலவுகள் அதே தொகையால் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) பிரதேச சபையினால் நடத்தப்படும் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவச் செயற்திட்டம் தொடர்பாக உர இருப்பு பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட 384 கி.கிராம் உர இருப்பின் பெறுமதியினை கணித்து ஐந்தொகையில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 ஆண்டிற்காக மாகாண குறிப்பிட்ட வேலைகளின் கீழ் கல்எந்தகுட்டிய பிரதான பாதையின் திருத்த வேலைக்காக 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 600,000 இற்கான கடன்கொடுத்தோர்களுக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், கொடுப்பனவு அறிக்கைகளின் பிரகாரம் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்த வேண்டிய தொகை ரூபா 537,877 ஆக காணப்பட்டமையால் மூலதனச் செலவுகள் ரூபா 62,123 தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------------------------------------

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய நிலுவை ஏனைய வருமானம் ரூபா 8,742,964 ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 6,354,309 ஆகும்.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

--------------------------------------------------------------

கணக்குகளில் அடங்கியுள்ள ரூபா 37,743,427 பெறுமதியான இரண்டு விடயங்கள் தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படட்டிருக்கவில்லை.

1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---------------------------------------------------------------------------------------------

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங் களுடன் இணக்கமின்மைகள் | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| விதி 218 | காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு வருடத்திற்கு ஒரு முறையேனும் பரிசோதனை மேற்கொள்வதற்காக தலைவரினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனினும் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) 2002 நவம்பர் 28 திகதிய இலக்கம் 2002/02 கொண்ட திறைசேரி சுற்று நிருபம் | கணனி துணைக் கருவிகள் மற்றும் மென்பொருள் கருவிகள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 263,252 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 598,225 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு தொடர்பாக தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பீட்டு | உள்ளவாறான | 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீதவரி | 1,629 | 878 | 102 |
| வாடகை | 1,861 | 1,994 | 130 |
| ஏனைய வருமானங்கள் | 21,035 | 16,048 | 6,105 |

2.2.2 நிலுவை வீத வரி

-----------------------------

மீளாய்வாண்டிற்கான வீதவரி பில்போடப்பட்ட போது ரூபா 146,366 தொகையும் (நூற்றிற்கு 10 கழித்த பின்னர்) 2013 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 101,643 தொகையுடன் கூட்டுத்தொகை ரூபா 248,009 ஆக காணப்பட்டதுடன் வருடத்தின் போதான அறவீடுகள் ரூபா 151,457 ஆகும் அறவீடுகளின் சதவீதம் நூற்றிற்கு 61 ஆக காணப்பட்டதுடன் சட்டத்தின் பிரிவு 158(1) இன் பிரகாரம் வருமானம் அறவீடு செய்யும் அலுவலரான சபையின் செயலாளர் நிலுவை வீத வரியினை அறவீடு செய்வது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை.

2.2.3 நிலுவை ஏக்கர் வரி

----------------------------------

மீளாய்வாண்டிற்காக ஏக்கர் வரி பில்போட்டவற்றின் பெறுமதி ரூபா 4,272 ஆக காணப்பட்டதுடன் 2013 ஜனவரி 01 திகதிய உள்ளவாறான நிலுவை மீதி ரூபா 4,819 உடன் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 9,091 ஆகும். அந்த மொத்த தொகையில் ஆண்டிற்கான பெறுவனவுகள் ரூபா 2,796 ஆக காணப்பட்டதுடன் அறவீடுகளின் சதவீதம் நூற்றிற்கு 30 பெறுமதி ஒன்றினை காட்டியது.

2.2.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

------------------------------------------------------------------------------------------

மாகாண பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத் தொகை கீழே தரப்பட்டுள்ளன.

| | ரூபா |
|---|---|
| நீதிமன்றத் தண்டப்ப பணம் | 943,254 |
| முத்திரைக் கட்டணம் | 5,120,592 |

3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

-------------------------------------------------

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

-----------------------------------------------

3.2.1 வீதி விளக்குகளின் திருத்த வேலைகள்

-----------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 ஆம் திகதி இலக்கம் PE/01/01 சுற்று நிருபத்தின் பந்தி 1.4 இன் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வீதி விளக்குகள் பராமரிப்பு நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் விளக்குகள் பொருத்தும் போது வீதி விளக்குகளின் மின்சார நுகர்வு குறிப்பிட்ட பிரதேசத்தின் கட்டணம் மற்றும் மேந்தலைச் செலவு சில்லறை நுகர்வில் நூற்றிற்கு 03 இற்கு வரையறையாக இருக்க வேண்டும். எனினும் இந்த விடயத்தில் சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) சபையினால் பேணப்பட்டிருந்த வீதி விளக்குகள் இன்வென்டிரி பதிவேட்டின் பிரகாரம் விளக்கு தூண்களின் எண்ணிக்கை 1044 ஆகக் காணப்பட்ட போதும் மின்சார சபையினால் அதிகாரப் பிரதேசத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள வீதி விளக்குகளின் எண்ணிக்கை 91 ஆகும்.

(இ) மின் தொழிநுட்பவியலாளரினால் மின்சார உபகரணங்கள் பொருத்துதல் தொடர்பாக பராமரிப்பு அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 72,840 பெறுமதியான 287 மின்குமிழ்கள் தொகையொன்று பொருத்தப்படாமல் கைவசம் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

3.2.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------

(அ) முன்னைய ஆண்டின் போது இணைத் தொடர்பு சீமெந்துக் கல் செயற்திட்டத்திற்காக ரூபா 175,644 தொகையொன்று செலவிடப்பட்டு சீமெந்துக் கல் உற்பத்தி இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அச் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டமையால் இவ் இயந்திரம் சுமார் 02 வருட காலமாக பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

(ஆ) இச் செயற்திட்டதின் விடயங்களுக்காக ரூபா 68,826 தொகையொன்று இவ் ஆண்டின் போது செலவிடப்பட்டிருந்ததுடன் அத் தொகையில் இருந்து பயன்தரு செயற்பாடு ஒன்று நடைபெற்றிருக்கவில்லை. இதன் காரணமாக இது வரை செலவிடபபட்ட ரூபா 244,470 தொகை பயனற்றதொன்றாகியுள்ளது.

3.2.3 மனித வள முகாமைத்துவம்

--------------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் பதவியணி மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவியின் வகைகள் | அங்கீகரிக் கப்பட்ட | உள்ளவாறான | வெற்றிடங்கள் | மிகை |
|---|---|---|---|---|
| மூன்றாம் தர | 01 | 02 | - | 01 |
| இரண்டாம் தர | 17 | 16 | 01 | - |
| ஆரம்ப | 21 | 19 | 02 | - |
| ஏனைய(அமைய, தற்காலிக, ஒப்பந்த) | - | 02 | - | 02 |
| | 39 | 39 | 03 | 03 |

(i) மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி ஆணையாளரிடம் இருந்து பதவியணி சம்பளம் மற்றும் மந்திரிமார் படி ஆக ரூபா 7,053,900 மீளளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது பதவியணி சம்பளம் மற்றும் படியாக ரூபா 10,850,615 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திற்கு ரூபா 3,796,715 இற்கான மேலதிக செலவுப் பொறுப்பொன்று ஏற்பட்டுள்ளது.

(ii) பாதை செயற்திட்டமொன்றிற்காக தற்காலிகமாக 06 பாதை தொழிலாளர்கள் ஆட்சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 668,900 தொகையொன்று சம்பளமாக செலுத்தப்பட்டுள்ளது. சபையினால் பாதை செயற்திட்டமொன்று மேற்கொள்ளல் மற்றும் அதற்காக தேவையான ஊழியர் எண்ணிக்கையை குறிப்பிட்டு அவற்றிற்கு தென்மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

4. கணக்கு விடயத்தன்மை மற்றும் நல்லாட்சி

---

4.1 அகக் கணக்காய்வு

---

சபையில் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

---

மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கவில்லை.

4.3 கொள்வனவுத் திட்டம்

---

மீளாய்வாண்டிற்காக 2006 ஜனவரி 25 திகதிய இலக்கம் ஜீ.பிர.நி/பி.வி..நி/18 கொண்ட சுற்று நிருபத்தில் 42(ஆ) வின் பிரகாரம் கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

பாதீட்டு வருமானம் மற்றும் செலவுகள் இடையே கணிசமான அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் சபையின் பாதீடு பயன்தரு நிதிக் கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்